மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
23.09.2022 வெள்ளிக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# வருடத்தில் அத்தனை நாட்களும் நினைவேந்தல் நடத்தப்பட வேண்டும்

## அருட்தந்தை சக்திவேல்

தமிழர் தாயகத்தை மீட்க களப்பலியானவர்களுக்காகவும், உயிர்த்தியாகமானோருக்காகவும் வருடத்தில் அத்தனை நாட்களும் நினைவேந்தல் நடத்தப்பட வேண்டும் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை மா.சத்திவேல் இன்று (23) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

திலீபன் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வு பூர்வமாக நடந்து கொண்டிருக்கின்றன. அவர் என்ன 02



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் முதல் பெண்மணி ஜில் பைடன் ஆகியோரை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சந்தித்துள்ளார். ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77வது அமர்வின்போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரவு விருந்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது. நியூயோர்க்கில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 77ஆவது அமர்வில், இலங்கையின் அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நாளை சமர்ப்பிக்கவுள்ளார். ஐ.நா. உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுடனும் அவர் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# திரிபோஷாவில் நச்சுத்தன்மை உண்மையே

## பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் செயற்குழு

நச்சுத்தன்மை வாய்ந்த திரிபோஷா கையிருப்பு தொடர்பாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கதின் பணிப்பாளர் உபுல் ரோஹன தெரிவித்த கருத்து சரியானது என அந்த சங்கத்தின் செயற்குழு உறுதியளித்துள்ளது. ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த, அந்தச் சங்கத்தின் தலைவர் எம்.என்.எச். நிஹால் கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு விநியோகிக்கப்படும் திரிபோஷாவில் உபுல் ரோஹன கூறியதை விட அதிகமான அஃப்லாடாக்சின் இருப்பதாக தெரிவித்துள்ளார். மேலும் விநியோகிக்கப்பட்ட திரிபோஷா மனித பாவனைக்கு உகந்ததல்ல எனவும் தொழிற்சங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகவும் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் அறிவித்துள்ளதாகவும் செயற்குழு தெரிவித்துள்ளது.பொறுப்புள்ள தொழிற்சங்கமாக தாங்கள் பொறுப்பற்ற அறிக்கைகளை வெளியிடுவதில்லை என்றும் தாங்கள் முன்வைத்த அனைத்து அறிக்கைகளும் ஆதாரங்களின் அடிப்படையில் அமைந்தவை என்றும் நிஹால் மேலும் கூறினார்.

# நீதி அமைச்சர் தலைமையில் புதிய அமைச்சரவை உபகுழு

இலத்திரனியல் ஊடகங்களுக்கான நெறிமுறை அமைப்பொன்றை அறிமுகப்படுத்துவதற்கு ஏதுவாக புதிய ஒலிபரப்புச் சட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு பொருத்தமான பரிந்துரைகளை வழங்குவதற்காக அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு பொறுப்புக்கூறும் ஊடக கலாசாரத்தை உருவாக்கும் நோக்கில் இது தொடர்பான யோசனை வெகுஜன ஊடக அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நீதி அமைச்சர் தலைமையில் குறித்த அமைச்சரவை உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது

# இலங்கையில் இந்திய இராணுவத்தின் முறைகேடுகள் குறித்து விசாரிக்கப்பட வேண்டும் மீனாக்ஷி கங்குலி




ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை முன்வைத்துள்ள பொறிமுறைகள் மூலம் இலங்கையில் இந்திய இராணுவத்தை நிலைநிறுத்தியபோது இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாகவும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என நான்கு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் கோரியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலியை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகமொன்று இது தொடர்பாக செய்தி வெளியிட்டுள்ளது. மோதலின்போது இடம்பெற்ற சம்பவங்கள் உள்ளிட்ட அனைத்து சர்வதேச குற்றங்களுக்கும் தீர்வு காண இலங்கை மீது வலுவான தீர்மானத்தை கோருவதாக மீனாக்ஷி கங்குலி தெரிவித்ததாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இந்திய படையினர் போர் நிறுத்த உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்காக அனுப்பப்பட்டிருந்தபோது இடம்பெற்ற முறைகேடுகள் முறையாக விசாரிக்கப்பட்டு, பொறுப்புக்கூறல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தேசிய பேரவையில் 12தமிழ்பேசுவர்கள்

பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் விதமாக அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டுள்ள தேசிய பேரவையில் 7 தமிழர்களும் 5 முஸ்லிம்களும் உறுப்பினர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர். கடந்த 20ஆம் திகதியன்று பாராளுமன்ற அங்கீகாரத்தை பெற்ற தேசிய பேரவையின் நியமனங்கள் தொடர்பில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இன்று (23) சபைக்கு அறிவித்தார். இதன்படி, தேசிய பேரவையின் தலைவராக சபாநாயகர் செயற்படுதுடன் பிரதமர் தினேஷ் குணவர்தன, சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, ஆளுந்தரப்பு பிரதமகொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகியோருடன் கட்சிகளின் பிரதிநிதிகள் 27 பேர் இந்த தேசிய பேரவையில் செயற்படுவார்கள் 02

# அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளை குறைத்தது சதொச நிறுவனம்



லங்கா சதொச நிறுவனம் 5 அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகளை குறைக்க தீர்மானித்துள்ளது. அதன்படி, நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும் இந்த பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக்கொள்ள முடியும் என அவர்கள் அறிவித்துள்ளனர். இந்த விலை குறைப்பு நேற்று முதல் வரும் 30ம் திகதி வரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயம் 25 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, புதிய விலை 150 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஒரு கிலோ வெள்ளை சீனி 7 02

# மின் துண்டிப்பு காலத்தை நீடிக்க இடமளிக்கப்படமாட்டாது

நிலக்கரியை உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாமல் செய்து , மின்துண்டிப்பு நேரத்தை நீடிக்கச் செய்வதற்கான திட்டமிட்ட சதி இடம்பெறுகிறது. இந்த சதித்திட்டத்தை முறியடிக்கும் வகையில் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் அவசர தேவையாக நிலக்கரியைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இன்று (23) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன் போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில் , நிலக்கரி உரிய நேரத்தில் கிடைக்கப் பெறாதவாறு திட்டமிட்டு இறக்குமதியை இடை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 02

# அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் இடை நிறுத்தப்படமாட்டாது

வரவு – செலவு திட்டத்தில் வரவிற்கும் செலவிற்கும் இடையிலான இடைவெளியை சமநிலைப்படுத்தாவிட்டால் , சர்வதேச நாடுகளிடமிருந்து கடனுதவியைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே அரச நிதி முகாமைத்துவம் ஒழுக்கமுடையதாக இடம்பெற வேண்டும் என்று அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார். இதற்காக ஒருபோதும் அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் இடைநிறுத்தப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டார். 02

# அமைச்சர்களின் வெளிநாட்டு பயணங்களுக்கு கட்டுப்பாடு

அமைச்சரவை அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களின் வெளிநாட்டு விஜயங்களை அத்தியாவசியப் பணிகளுக்காக மாத்திரம் மட்டுப்படுத்துவதற்கு ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை கருத்திற் கொண்டு அரச செலவினங்களைக் குறைக்கும் நோக்கில் ஜனாதிபதியினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக அமைச்சரவை ஊடக பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார். அவ்வாறான சுற்றுப்பயணங்களுக்கு அவசியமான அலுவலர் அல்லது குறித்த சுற்றுப்பயணக் கடமைகளுக்கு அத்தியாவசியமான ஒருசிலரை மாத்திரம் பங்கேற்கச் செய்தல் வேண்டுமென ஜனாதிபதியின் குறித்த யோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

## வருடத்தில் அத்தனை நாட்களும்

கோரிக்கைகளை முன் வைத்து உயிர் தியாகமானாரோ அந்தக் கோரிக்கைகள் அன்றும் நிறைவேற்றப்படவில்லை. இன்றும் நிறைவேற்றப்படாத மட்டுமல்ல தமிழர் தாயகத்தின் திருகோணமலை திருகோணேஸ்வர கோவில் பிரதேசத்தையும், குருந்தூர் மலை பிரதேசத்தையும் ஆக்கிரமிக்கும் செயற்பாடு ஐ.நா மனித உரிமை பேரவை நடத்திக் கொண்டிருக்கின்ற கால சூழ்நிலையிலும் தொடர்ந்து கொண்டிருப்பது ஒட்டுமொத்த இன அழிப்பிற்குமான பொது கட்டமைப்பு உருவாக்கத்தின் தேவையை உணர்த்தி நிற்கின்ற சூழ்நிலையில் திலீபன் நினைவு சுடர் ஏற்றும் பொது கட்டமைப்பு என ஒரு சிலரை கூட்டுவது நினைவேந்தலுக்கு மட்டுமல்ல தமிழர் தியாகத் தீபம் திலீபனுக்கே அவமானத்தையே ஏற்படுத்தும்.

தமிழர் தாயகத்தை மீட்க களப்பலியானவர்களுக்காகவும், உயிர்த்தியாகமானோருக்காகவும் வருடத்தில் அத்தனை நாட்களும் நினைவேந்தல் நடத்தப்பட வேண்டும். புத்தர் "மரணம் நிகழாத வீட்டில் எள்ளு கொண்டு வருமாறு" கேட்டார். மரணம் நிகழாத வீடுகளே இல்லாத போல் யுத்த காலத்தில் இரத்த ஆறு ஓடாத தமிழர் கிராமங்களே இல்லை. மரண ஓலம் கேட்காத நாட்களும் இல்லை.

இந்நிலையில் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு என்பது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், மாவீரர் நாள் நினைவேந்தல், புனித நவாலி நினைவேந்தல், நாகர்கோவில், செஞ்சோலை அனைத்திற்கும் அனைத்து மக்களையும், அனைத்து ஊர்களையும் இணைத்து உருவாக்குதல் வேண்டும். இத்தகைய நினைவேந்தல்கள் அவர்ஊருக்கும் ஊரவர்களுக்கும் மட்டும் சொந்தமானதல்ல. உதாரணமாக முள்ளிவாய்க்கால் நிலைவேந்தல் முள்ளிவாய்க்கால் மக்களுக்கு மட்டும் சொந்தமானது. அதேபோல் திலீபன் நினைவேந்தல் யாழ் மாநகர சபைக்கு மட்டும் சொந்தமானதாக்கவும் கூடாது. அமைக்க நினைக்கும் பொது கட்டமைப்பு பிரதான நினைவேந்தல் சார்பாகவும் தமிழர் தாயகத்தை உள்ளடக்கியதாகவும் உருவாக்க வேண்டும். பிரதேச ரீதியில் நடத்தும் நினைவேந்தல்களை கிரகமாக நடத்துவதற்கும் பொது நினைவேந்தல்களை வழி நடாத்துவதற்கும் பொது கட்டமைப்பு செயல்பட வேண்டும் அதன் மூலமே தமிழர் தாயகத்தை நினைவேந்தல் ரீதியிலும், அரசியல் ரீதியிலும் உயிர்ப்புடன் வைத்திருக்க முடியும்.

## தேசிய பேரவையில் 12தமிழ்பேசுவர்கள்

என சபாநாயகர் அறிவித்துள்ளார். இதற்கு மேலதிகமாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தெரிவு செய்த 35க்கும் குறைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தேசிய பேரவைக்கு நியமிக்கப்படவேண்டுமென்ற விதி முறைக்கமைய 27 உறுப்பினர்கள் அரசியல் கட்சிகளிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளனர்.இதில் டக்ளஸ் தேவானந்தா, நஸீர் அஹமட், சிசிர ஜெயகொடி ஜோன்ஸ்ட்ன் பெர்ணான்டோ, டிரான் அலஸ், சிவநேசத்துரை சந்திரகாந்தன், பவித்ரா வன்னியாராச்சி, வஜிர அபேவர்த்தன, ஏ.எல்.எம் அத்தாவுல்லா , திஸ்ஸ விதாரன, ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன், விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, பழனி திகாம்பரம், மனோ கணேசன், ரோஹித்த அபேகுணவர்த்தன, நாமல் ராஜபக்ஷ, அலி சப்ரி ரஹீம், ஜீவன் தொண்டமான், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அத்துரலியே ரத்தன தேரர், அசங்க நவரட்ன, சி.வி விக்னேஸ்வரன் ,வாசுதேவ நாணயக்கார,வீரசிங்க வீரசுமண மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் உறுப்பினர்களாக செயற்படுவார்கள் என்றும் சபாநாயகர் அறிவித்துள்ளார்.பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய, நடுத்தர பொது குறைந்தபட்ச வேலைத்திட்டம் தொடர்பில் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்தல் , அமைச்சர்கள் விசேட தெரிவுக்குழுக்களின் தலைவர்கள், இளைஞர் அமைப்புகளை கண்காணிப்போரின் பங்குபற்றுதலுடன் விசேட கூட்டத்திற்கான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தேன் மற்றும் குறுகிய, நடுத்தர, நீண்ட கால தேசிய கொள்கைகளை தயாரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்குரிய முன்னுரிமைகளை நிர்ணயித்தல் ஆகியன தேசிய பேரவையின் பொறுப்பாகும். தற்போது அமுலிலுள்ள தெரிவுக்குழுக்களிடமிருந்து அறிக்கைகளை பெற்றுக்கொள்ளும் இயலுமையும் தேசிய பேரவைக்கு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மின் துண்டிப்பு காலத்தை நீடிக்க இடமளிக்கப்படமாட்டாது

இதன் மூலம் மின் துண்டிப்பை நீடிப்பதே ஒரு சில தரப்பினரது எதிர்பார்ப்பாகும். தற்போது கிடைக்கப் பெற்றிருந்த நிலக்கரி இறக்குமதிக்கான விலைமனு , கடந்த ஆண்டை விட குறைந்த விலையாகவே காணப்படுகிறது. ஏனைய பொருட்கள் அனைத்தினதும் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் , நிலக்கரியின் விலை மாத்திரம் குறைவாகக் காணப்பட்டது. எனினும் சில தொழிநுட்ப காரணிகள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக நிலக்கரியை இறக்குமதி செய்வதில் சில சிக்கல்கள் ஏற்பட்டன. இவ்வாறான நிலைமைகள் ஏற்படும் அவசர தேவை கருதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு அமைச்சரவை உப குழு அமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அக்குழுவின் ஆலோசனைக்கமைய மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் அவசர தேவையாக நிலக்கரியைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிலக்கரி மூலமான மின் உற்பத்தியை நிறுத்தி மின் துண்டிப்பை 10 மணித்தியாலங்கள் வரை அதிகரிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை முறியடிப்பதே எமது இலக்காகும். இதற்கு தேவையான எந்தவொரு நடவடிக்கையையும் முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

வலு சக்தி அமைச்சர் மற்றும் இதனுடன் தொடர்புடைய அமைச்சரவை உப குழுக்களுக்கு இதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எனவே மக்களுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் அவசர தேசிய தேவையாகக் கருதி நிலக்கரி கொள்வனவு முன்னெடுக்கப்படும் என்றார்.

## அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின்

ரூபாயால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 278 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. 185 ரூபாவாக இருந்த இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ வெள்ளை அரிசியின் விலை 6 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, புதிய விலை 179 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ நாட்டு அரிசியை 9 ரூபாயால் குறைத்து நுகர்வோருக்கு வழங்க சதொச கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி, புதிய விலை 185 ரூபாயாக உள்ளது. இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ சிவப்பு பருப்பின் விலை 14 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, புதிய விலை 415 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் இடை நிறுத்தப்படமாட்டாது

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு வெள்ளிக்கிழமை (23) நடைபெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் , வரவு – செலவு திட்டத்தில் வரவிற்கும் செலவிற்கும் இடையிலான இடைவெளியை சமநிலைப்படுத்தாவிட்டால் , சர்வதேச நாடுகளிடமிருந்து கடனுதவியைப் பெற்றுக் கொள்ள முடியாது. இதற்காக 2003 ஆம் ஆண்டு அரச நிதி முகாமைத்துவப்படுத்தல் பொறுப்பு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றாவிட்டால் , நாட்டுக்கு பாராளுமன்றத்தினால் நிதி அதிகாரத்தை கொண்டு செல்ல முடியாத நிலைமை ஏற்படும். எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சம்பளம் வழங்கப்படுவது இடை நிறுத்தப்பட மாட்டாது. கடந்த ஆண்டு அரசாங்கத்தின் வருமானம் 1268 பில்லியன் ரூபாவாகும். இதில் சம்பளம் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதற்காக 1115 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. அதாவது முழு வரி வருமானத்தில் 86 சதவீதமானவை சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக செலவிடப்படுகிறது. அரச நிதி முகாமைத்துவத்தில் காணப்படும் பிரதான பிரச்சினை இதுவாகும். எனவே மாத இறுதியில் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டியதும் , ஓய்வூதியம் வழங்க வேண்டியதும் அத்தியாவசியமானதாகும். எதிர்காலத்திலாவது உண்மையை நிலைவரத்தை மக்களுக்கு தெளிவுபடுத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நிதி ஒழுக்கம் ஏற்படுத்தப்பட வேண்டும். மாறாக தொடர்ந்தும் பணம் அச்சிடப்படுமாயின் ரூபாவின் பெறுமதி குறைவடைந்து செல்வதோடு , பணவீக்கமும் அதிகரித்துச் செல்லும் என்றார்.

# புதுநகர் பாடசாலை முப்பெரும் விழா




**நூருள் /ஹுதா உமர்**

சம்மாந்துறை கல்வி வலய கமு/சது/ புதுநகர் பாடசாலை முப்பெரும் விழா பாடசாலை அதிபர் எஸ். சிவயோகராஜா தலைமையில் பாடசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர் கலந்துகொண்டதோடு, கௌரவ அதிதியாக கோட்டக்கல்வி அதிகாரி எம்.ஏ. சபூர்தம்பி, விசேட அதிதிகளாக இளம் விஞ்ஞானி எஸ். வினோஜ்குமார், புஸ்பா பவுன்டேசன் பணிப்பாளர் எஸ்.இராசையா, பிரதி அதிபர் ஏ.எல். சர்ஜ/ன் உட்பட ஆலயத் தலைவர்கள் மற்றும் ஊர் மக்களும் கலந்து கொண்டனர்.

அங்கு விசேட அதிதியாக கலந்து கொண்ட எஸ் வினோஜ்குமார் கருத்து தெரிவிக்கையில் " பாடசாலை படிக்கும் மாணவர்களுக்கு பாடசாலை தோட்டங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்கள் அமைப்பதற்கு அருகில் உள்ள ஆலயங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் நலன்புரி ஆர்வலர்கள் உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்க வேண்டும். இதனால் தற்காலத்தில் தொலைபேசி பாவனை, கொவிட்19 மற்றும் பொருளாதார வீழ்ச்சியினால் மன அழுத்தத்தில் பல மாணவர்கள் உள்ளார்கள். அதற்கு சிறந்த மருந்தாக வீட்டுத்தோட்டம் மற்றும் பாடசாலை தோட்டங்கள் அமையும். மேலும் மாணவர்களுக்கு முயற்சியாண்மை சார்ந்த மேலதிக விடயங்களையும் ஆசிரியர்கள் வழங்க வேண்டும். இதனால் எதிர்காலத்தில் படித்து விட்டு தொழிலை தேடுபவர்களாக அல்லாமல் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குபவர்களாக உருவாக்குவார்கள். மேலும் மாணவர்களுக்கு ஆசிரியர்கள் கற்பிக்காமல் மாணவர்களுக்கு மாணவர்களே கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் உதவி செய்தால் அனைத்து மாணவர்களிடமும் தலைமைத்துவ பண்பு உருவாகும். கற்றல் செயற்பாடுகளுக்கு உதவியாக சூழல் உள்ள கழிவுப் பொருட்களைக் கொண்டு மாதிரிகளை உருவாக்கி, மாணவர்கள் அதனை பயன்படுத்தினால் புத்தாக்க சிந்தனை விருத்தியடையும் என்றார்.

இவ்விழாவில் கடந்த 2020 மற்றும் 2021ம் ஆண்டுகளில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# கரையோர தூய்மைப்படுத்தும் நிகழ்வு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

சர்வதேச கடல்சார் சூழல் பாதுகாப்பு தூய்மைப்படுத்தும் வாரத்தினை (2022.09.19 – 2022.09.25) முன்னிட்டு களுதாவளை மற்றும் பெரியகல்லாறு கடற்கரையோரங்களை தூய்மைப்படுத்தும் நிகழ்வு (21) திகதி சமுர்த்தி பயனாளிகளின் பங்களிப்புடன் இடம்பெற்றுள்ளது. மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி.சிவப்பிரியா வில்வரெத்னம் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் இடம்பெற்ற இந் நிகழ்வில் சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர், கல்லாறு சமுர்த்தி வங்கி முகாமையாளர், கரையோரம் பேணல் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமூக அபிவிருத்தி உதவியாளர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மீபா ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# பயங்கரவாதத்தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இன்றும் முன்னெடுப்பு





பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை இன்றைய தினமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இன்றைய தினம்(23) பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், இரா.சாணக்கியன், சட்டத்தரணிகள், சட்டக்கல்லூரி மாணவர்கள், சர்வமதத் தலைவர்கள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர். பயங்கரவாத தடை சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசு கட்சியின் ஏற்பாட்டில் காங்கேசன்துறை முதல் ஹம்பாந்தோட்டை வரையில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

# அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா கல்லூரியில் கணித முகாம்



**(வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் ஜெம் செயத்திட்டத்தின் கீழ் கணித முகாம் அக்கரைப்பற்று இராமகிருஷ்ண கல்லூரி ஆராதனை மண்டபத்தில் நேற்று(23) வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கல்லூரி அதிபர் ஜே. ஆர். டேவிட் அமிர்தலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அதிதிகளாக ஓய்வு பெற்ற கணித பாட உதவி கல்விப் பண்ணிப்பாளர் கே. பாலதாசன் திருக்கோவில் வலயத்தின் கணித பாட உதவி கல்விப் பணிப்பாளர் கு.தயாருபன்,கணித பாட ஆசிரியர் ஆலோசகர் கே.சசிகரன், மற்றும் இராமகிருஸ்ணா கல்லூரியின் பிரதி அதிபர்களான வ. ஜெயந்தன், ரி.மதியழகன் மேலும் கணித பாட ஆசிரியர் ஜனாப் சத்தார் ஆகியோர் கலந்து கொண்டனர் . சிறப்பு அம்சமாக மாணவர்களின் வினாவிடைப் போட்டி மற்றும் கணித வில்லுப்பாட்டு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. போட்டியில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டன.

# லொறி குடைசாய்ந்து விபத்து



**தலவாக்கலை பி.கேதீஸ்**

அட்டன் – அவிசாவளை வீதியில் கினிகத்தேன கடவல பகுதியில் லொறி ஒன்று இன்று(23) வீதியை விட்டு விலகி குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்துள்ளதாக கினிகத்தேன பொலிஸார் தெரிவித்தனர். பிலியந்தலையிலிருந்து ஹட்டன் நோக்கி பொருட்களை ஏற்றிச் சென்ற லொறியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானதுடன், விபத்தில் காயமடைந்த லொறியின் சாரதி சிகிச்சைக்காக நாவலப்பிட்டி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் விபத்தில் லொறியும் பாரியளவில் சேதமடைந்துள்ளதுடன், சம்பவம் தொடர்பில் கினிகத்தேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு.மேற்கு இரு மாணவர்கள் தேசிய போட்டிற்கு தெரிவு

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த இரு மாணவர்கள் தேசியமட்ட தமிழ்தினப்போட்டியில் பங்கேற்பதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் நடைபெற்ற மாகாண ஆக்கத்திறன் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்ட மாணவர்களே தேசியமட்ட போட்டிற்கு தெரிவாகியுள்ளனர். குறித்த வலயத்திற்குட்பட்ட முதலைக்குடா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ரி.தேனுஸ்கா என்ற மாணவி சிறுகதைப்போட்டியில் 1ம் இடத்தினையும், அரசடித்தீவு விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் எஸ்.சசிகலா என்ற மாணவி குறுநாடகப்போட்டியில் முதலிடத்தினையும் பெற்று வெற்றீட்டியுள்ளனர். குறித்த மாணவர்களுக்கும், பயிற்றுவித்த ஆசிரியர்கள், அதிபர் ஆகியோருக்கும் மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் அகிலா கனகசூரியம் வாழ்த்துக்களையும், பாராட்டினையும் தெரிவித்துள்ளார்.

# புதிய அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் பொலிஸ் நிலையங்களுக்கு கண்காணிப்பு விஜயம்

**பாறுக் ஷிஹான்**



புதிய பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய சிறி கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் உத்தியோகபூர்வமாக கடமையை பொறுப்பேற்ற பின்னர் இன்று குறித்த கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட புதிய அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தமயந்த விஜய சிறி அம்பாறை மாவட்டத்தின் பொலிஸ் நிலையங்களின் பிரச்சினைகளை ஆராயும் முகமாக வருகை தந்த அவர் கல்முனை சம்மாந்துறை பொலிஸ் நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கும் விஜயம் செய்து குறைநிறைகளை ஆராய்ந்துள்ளார்.

# காத்தான்குடி உணவகங்களில் திடீர் சோதனை பேக்கரி உள்ளிட்ட மூன்று கடைகளுக்கு சீல்



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு காத்தான்குடியில் உணவு தயாரிப்பில் ஈடுபடும் ஹோட்டல்கள், சிற்றூண்டிச்சாலைகள், பேக்கரிகள் உணவு தயாரிக்கும் இடங்களில் நேற்று (22) திகதி திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு இல்லாமல் மனித பாவனைக்குதவாத உணவுகள் காணப்பட்ட சில ஹோட்டல்கள், சிற்றூண்டிச்சாலைகள், பேக்கரிகள் உணவு தயாரிக்கும் இடங்களின் உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன் உரிமையாளர்களுக்கு இவைகளை சீர் செய்வதற்காக கால அவகாசமும் வழங்கப்பட்டதுடன், பேக்கரி உள்ளிட்ட மூன்று உணவகங்களுக்கு இதன்போது சீல் வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி குணசிங்கம் சுகுணன் தலைமையில் அவருடைய வழிகாட்டலிலும் நடைபெற்ற இச்சோதனை நடவடிக்கையில் சுகாதார வைத்திய அதிகாரிகள்,பொதுச்சுகாதார பரிசோதகர்கள், சுகாதார அதிகாரிகள் என 60 உத்தியோகத்தர்கள் இதன்போது கலந்து கொண்டுள்ளனர்.

உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் இந்த சோதனை நடவடிக்கை மாவட்டம் முழுவதும் மேற்கொள்ள நடவடிக்கை எடுகப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார். இதன்போது காத்தான்குடி நகரில் காணப்பட்ட 69 உணவு நிலையங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன், இதில் 41 வர்த்தக நிலையங்களில் இருந்து 73 வகையான மனிதபாவனைக்குஉதவாதஉணவுப்பொருட்கள் கைப்பற்றப்பட்டதுடன் 23 வகையான பொருட்கள் இன்றே எரித்து அழிக்கப்பட்டதுடன் ஏனையவைகளின் மாதிரிகள் ஆய்வுக்காக கொழும்பிலுள்ள மருத்துவ ஆய்வு மையத்திற்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளதென பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஜீ.சுகுணன் இதன்போது தெரிவித்துள்ளார்.

# தேர்தல் சட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் தொடர்பிலான தொடர் கலந்துரையாடல்





**(வாஸ் கூஞ்ஞ)**

முன்மொழியப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு தீர்மானங்களை முறைப்படுத்துவதற்காகவும் , மக்கள் மயப்படுத்துவதற்காகவும் , தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் தேர்தல் சட்டங்கள் மற்றும் சீர்திருத்தங்கள் தொர்பிலான தொடர் கலந்துரையாடல் மன்னாரிலும் நடைபெற்றது. மன்னார் நகரில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் வியாழக்கிழமை (22.09.2022) மன்னார் மாவட்ட பதில் உதவி தேர்தல் ஆணையாளர் கந்தையா நிர்மலரூபன் தலைமையில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை இவ் நிகழ்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி.புஞ்சிஹேவா , தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க , ஜனநாய சீர்திருத்தம் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க இவர்களுடன் தேர்தல் ஆணைக்குழுவைச் சார்ந்த உறுப்பினர்களும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் இவ் கலந்துரையாடலுக்கு தெரிவு செய்யப்பட்ட மன்னார் மாவட்டத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களாக பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள் உறுப்பினர்கள் மாற்றாற்றல் கொண்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிவில் அமைப்பு மற்றும் சமூக ஆர்வலர்கள் ஊடகவியலாளர்கள் ஆசிரியர்கள் என பலர் அழைக்கப்பட்டு இதில் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலின்போது தேர்தல் ஆணைக்குழுவின் வேலைத்திட்டம் மற்றும் தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கான அதன் கண்ணோட்டம் பற்றிய பகுப்பாய்வு வழக்கறிஞரும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருமான நிமல் ஜி.புஞ்சிஹேவா என்பவரால் மிகவும் தெளிவாக விளக்கம் அளிக்கப்பட்டது.

அத்துடன் ஜனநாயக சீர்திருத்தம் மற்றும் தேர்தல் ஆய்வுகள் நிறுவனத்தின் நிர்வாக பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க அவர்களால் தற்போதைய தேர்தல் முறையை சீர்திருத்த வேண்டியதன் அவசியம் மற்றும் அதில் சிவில் சமூகத்தின் பங்கு என்ற தலைப்பில் உரையாற்றினார். இதன்போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் உரையாற்றியதுடன் இதில் பங்கு பற்றியோரின் தங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளும் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு

களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி. நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி. அலுவலக அறை 170 சதுர அடி. குளியல் அறை, மலசலகூடங்கள் 02, நீர் வசதி, மின்சார வசதி , போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)



அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# ஸ்ரீலங்கா அரசுடன் இணக்க அரசியல் செய்வதால் தமிழ்த் தேசியக்கட்சிகளால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமா? வரலாறுகள் கூறுவது என்ன?





**ஜி.ஸ்ரீநேசன்,**
**முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு**

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக்கட்சிகள் அரசுடன் முரண்படாமல் இணக்க அரசியல் செய்தால்தான் தேசிய இனப்பிரச்சினை விடயத்தில் தீர்வுகாணமுடியும் என்று,இன்றும் சிலர் பேசுவதையும் முணுமுணுப்பதையும் கேட்க முடிகின்றது.பண்டா,டட்லி,சந்திரிக்கா,ரணில் போன்ற தலைவர்களின் ஆட்சிக்காலங்களில் சில விடயங்கள் சாதிக்கப்பட்டதாக அல்லது செய்யப்பட்டதாக விளக்கம் அளிக்கும் ஒரு சிலரை தமிழ்த்தேசியக்கட்சிகளில் காணவும் முடிகின்றது.இப்படியான கருத்தில் உண்மைகள் இருக்கின்றனவா? என்று ஆராய்வோம்.

1956 இல் தனிச்சிங்களச்சட்டம் கொண்டு வரப்பட்ட பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில்,இனப்பிரச்சினை தீர்வுக்காக 1957 இல் பண்டா செல்வா ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டது.ஆனால் அந்த ஒப்பந்தம் எழுதிய மை காய்வதற்கு முன்பாகக் கிழித்தறியப்பட்டது என்றுதான் தமிழ்த்தேசியத்தலைவர்கள் காரசாரமாக விமர்சித்தனர்.அதாவது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழரசுக்கட்சியும் தலைவர் தந்தை செல்வநாயகம் அவர்களும் சிங்களத் தலைவரகளோடு முயற்சித்தபோதும் வெற்றியளிக்கவில்லை. ஏமாற்றந்தான் விடையானது.1965 இல் டட்லி சேனநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் தந்தை செல்வா மீண்டும் இணக்க அரசியல் மூலமாக முயற்சித்து டட்லி செல்வா ஒப்பந்தம் செய்துகொண்டார்.அதுவும் டட்லியினால் கைவிடப்பட்டது.அதாவது மீண்டும் தமிழர்கள் ஏமாற்றப்பட்டார்கள்.

**தமிழ்த் தேசியக் கட்சிகளிலும் உள்நாட்டுப் பொறிமுறை பற்றிப் பேசுபவர்கள் இருந்தால் அவர்கள் வராற்றை மறக்கும் அல்லது மறைக்கும் இரட்டை முகவர்களாகவே இருக்க முடியும். ராஜபக்ச அரசாங்கத்துடன் இணக்க, ஐக்கிய அரசியல் செய்தால் கிழக்கைக் காப்பாற்றலாம், கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தலாம் என்ற கிழக்கிருப்புவாத இராசாங்க அமைச்சர்கள் இரு விடயங்களை மாத்திரமே செய்கின்றார்கள். அவை அரசாங்கம் சொல்வதற்கெல்லாம் கை உயர்த்துவதும் தலையாட்டுவதும் மட்டுமேயாகும். எதிர்த்தால் பதவிகள் காலியாகும்,குற்றக் கோவைகள் இவர்களின் தலைகளைச் சுற்றிவரும். இதுதான் இணக்க அரசியலின் இழித்தவாயர்களின் நிலைமையாகும்.**

அடுத்து ஸ்ரீமாவின் ஆட்சிக்காலத்தில் 1972 காலப்பகுதியில் முதலாம் குடியரசு யாப்பில் இணைத்துக்கொள்ளுமாறு,தமிழர் தரப்பில் ஆறம்சக்கோரிக்கை கொடுக்கப்பட்டது.அக்கோரிக்கை ஸ்ரீமா அரசாங்கத்தால் முற்றாக நிராகரிக்கப்பட்டது.இங்கும் ஏமாற்றமே தமிழ்த்தலைமைக்கும் தமிழ் மக்களுக்கும் ஏற்பட்டது.ஜெயவர்தனா ஆட்சிக்காலத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியினருடன் வட்டமேசை மாநாடுகள் இனப்பிரச்சினை தொடர்பில் நடைபெற்றன.ஏமாற்றுத்தீர்வாக மாவட்ட அபிவிருத்திசபைமுறை முன்வைக்கப்பட்டது. அதுவும் பயனளிக்கவில்லை.பிறேமதாச ஆட்சிக்காலத்தில் மாகாணசபைக்குரிய காணி அதிகாரம்,பொலிஸ் அதிகாரம் தவிர்க்கப்பட்டன.சந்திரிக்கா அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் பிராந்தியசபை முறைமையை வழங்கவுள்ளதாகக்



கூறப்பட்டது.ஆனால் அதுவும் நடைபெறவில்லை.மைத்திரி ரணிலின் நல்லாட்சிக்காலத்தில் இணக்க அரசியல் செயற்பாடுகள் மூலமாக பாராளுமன்றத்தினை யாப்புநிருணயசபையாக மாற்றினர்.இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பு சர்வகட்சிக்கூட்டங்களில் பங்களிப்பு வழங்கியது.அதுவும் குழப்பபட்டது.

இப்படியெல்லாம் வரலாறுகள் பாடம் புகட்டுகையில்,இலங்கை அரசுடன் இணக்க அரசியல் செய்து அவர்களது உள்நாட்டுப்பொறிமுறை மூலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடுடியும் என்பது,பேரினவாதம் என்னும் இருட்டறையில் தீர்வு என்னும் கறுப்புப்பூனையைப் பிடிக்கும் வீண்முயற்சியாகவே அமையும்.

இப்படியெல்லாம் இருக்க அரசுடன் இணைந்து பணியாற்றித் தீர்வை எட்டலாம் என்பது மக்களை ஏமாற்றி அரசியல் செய்வது,இன்னும் காலத்தைக் கரைக்கும் செயலாகவே அமையும்.உளுத்துப்போன உள்நாட்டுப்பொறிமுறைகளால் பிரச்சினைகளை உருவாக்க முடியுமேயொழிய தீர்க்க முடியாது என்பதே வரலாற்று உண்மையாகும்.தமிழ்த்தேசியக்கட்சிகளிலும் உள்நாட்டுப்பொறிமுறை பற்றிப் பேசுபவர்கள் இருந்தால் அவர்கள் வராற்றை மறக்கும் அல்லது மறைக்கும் இரட்டை முகவர்களாகவே இருக்க முடியும்.ராஜபக்ச அரசாங்கத்துடன் இணக்க,ஐக்கிய அரசியல் செய்தால் கிழக்கைக் காப்பாற்றலாம்,கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை தரமுயர்த்தலாம் என்ற கிழக்கிருப்புவாத இராசாங்க அமைச்சர்கள் இரு விடயங்களை மாத்திரமே செய்கின்றார்கள்.அவை அரசாங்கம் சொல்வதற்கெல்லாம் கை உயர்த்துவதும் தலையாட்டுவதும் மட்டுமேயாகும்.எதிர்த்தால் பதவிகள் காலியாகும்,குற்றக் கோவைகள் இவர்களின் தலைகளைச் சுற்றிவரும்.இதுதான் இணக்க அரசியலின் இழித்தவாயர்களின் நிலைமையாகும்.

நிறைவேறாத ஒப்பந்தங்கள்,உடன்படிக்கைகள்,கூடிய கூட்டங்கள்,பேச்சுகள் ஏமாற்றங்களேயொழிய சாதனைகளாக இருக்க முடியாது.அவை இனவாத சாத்தான்கள் ஓதிய வேதங்களாகவே அமையும்.

# மட்டக்களப்பில் விளையாட்டு துறையில் சாதனை படைத்தவர்களுக்கு வர்ணவிருதுகள் வழங்கும் விழா



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மாகாண மட்டம், தேசிய மட்டம் மற்றும் சர்வதேச ரீதிகளில் வெற்றி பெற்று மட்டக்களப்பு மாவட்டத்துக்கு பெருமை சேர்த்த சாதனை வீர வீராங்கனைகளை கௌரவிக்கும் வர்ண விருதுகள் – 2022 நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அவர்களது தலைமையில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி தேவநாயகம் மண்டபத்தில் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந் நிகழ்வு தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடலொன்று மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று (22) திகதி வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கடந்த 2019 – 2021 காலப்பகுதிகளில் மாகாண, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் சாதனை படைத்த வீரர்கள் மற்றும் அவர்களின் பயிற்றுவிப்பாளர்களை வர்ண விருதுகள் வழங்கும் நிகழ்வினூடாக கௌரவிக்கப்படவுள்ளமை தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், மாவட்ட அரசாங்க அதிபரினால் பல்வேறு ஆலோசனைகள் இதன்போது முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு மாவட்ட செயலக கீத வெளியீடு மற்றும் வெற்றி நினைவு மலர் வெளியிடு போன்றவை தொடர்பாகவும் இதன்போது விரிவாக ஆராயப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும் .

# உளவளத்துணை ஆசிரியர்களுக்கான செயலமர்வு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தினால் மண்முனை தென்மேற்கு பிரிவு பாடசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள உளவளத்துணை ஆசிரியர்களுக்கான செயலமர்வு பிரதேச செயலாளர் திருமதி. தெட்சணகௌரி டினேஷ் தலைமையில் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றுள்ளது. கடந்த இரண்டு வருடங்களாக ஏற்பட்டுள்ள கொரோனா பேரிடர் நிலை மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ளும் குடும்பங்களில் வாழ்கின்ற சிறுவர்கள் தங்களது கற்றல் செயற்பாடுகளில் கவனம் செலுத்தும் நிலை சமீப காலங்களாக குறைவடைந்து உள்ளமை, மாணவர்கள் ஒழுங்கீனமாக பாடசாலைக்கு வருகை தருதல், மன அழுத்தங்களினால் பாதிக்கப்படுதல்

இவற்றினை அடிப்படையாக கொண்டு பாடசாலையில் இணைக்கப்பட்ட உளவளத்துணை ஆசிரியர்களுக்கு மாணவர்களை எவ்வாறு ஆரோக்கியமான கற்றல் செயற்பாடுகளில் உள்வாங்குதல் தொடர்பான விடயங்கள் அடங்கிய செயலமர்வு நடைபெற்றுள்ளது. இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி மேனகா புவிக்குமார் மட்டக்களப்பு மத்தி உளவளத்துணை சேவைக்கால ஆலோசகர் தா.குணரெத்தினம் உள்ளிட்டோர் கலந்துகொண்டுள்ளனர்.

இச்செயலமர்வினை மாவட்ட சிறுவர் உரிமை மேம்பாட்டு இணைப்பாளர் வீ.குகதாசன் மற்றும் பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ம.புவிதரன் மற்றும் உளவளத்துணை உத்தியோகத்தர் எஸ்.சசிதரன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.

# நெற்பயிர்களுக்கான சட்டப்பூர்வ உரிமம் வழங்கும் நிகழ்வு



ஹஸ்பர்

மீ ஓயா அமைப்பைச் சேர்ந்த பதவிஸ்ரீபுர பரண மெதவச்சிய கிராமத்தில் வசிக்கும் நாற்பத்தாறு குடும்பங்களுக்கு நெற்பயிர்களுக்கான சட்டப்பூர்வ உரிமம் வழங்கும் நிகழ்வு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. சமன்புர மீஓயா சனசமூக மண்டபத்தில் பத்திரம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது நெடுங்காலமாக சிங்கள மாவீரர் அமைப்பினரும் அரசாங்கமும் இந்த நெற்காணிகளை வழங்குவதற்கு கடுமையாக உழைத்தனர்.

யுத்த காலத்தில் இருந்து இக்கிராமங்களில் வாழ்ந்து வரும் மக்களை பாராட்டுவதாகவும் ஆளுநர் தெரிவித்தார். சட்டப்பூர்வ நெல் நில அனுமதிகளைப் பெற்றுள்ள இந்த குடியிருப்பாளர்கள் முடிந்தவரை நச்சுத்தன்மையற்ற விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை, பதவி ஸ்ரீபுர கிராமத்தில் வசிக்கும் சிறுநீரக நோயாளர்களுக்கு ஆளுநரின் தலையீட்டின் ஊடாக பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட தண்ணீர் வடிகட்டி மற்றும் கொதிக்கும் கெட்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எல். பி.மதநாயக்க, பதவி ஸ்ரீபுர உதவிப் பிரதேச செயலாளர், சிங்கள மாவீரர் கட்டளையின் தேசியக் குழு உறுப்பினர்களான திரு.சுரேன் அபேகுணசேகர, அஜந்த பெரேரா, பதவி ஸ்ரீபுர பிரதேச சபைத் தலைவர் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் கலந்துகொண்டனர்.

# கந்தளாய் பிரதேச சபைக்கு ஆளுநர் திடீர் விஜயம்



கந்தளாய் பிரதேச சபைக்கு கிழக்கு ஆளுநர் அநுராதா யஹம்பத் திடீர் என சென்றார். தேவையான வசதிகளை செய்து கொடுக்காத கந்தளாய் உள்ளூராட்சி மன்ற அதிகாரிகளுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யஹம்பத் (22) பிற்பகல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

47ஆவது கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகள்நேற்று (22) காலை கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் ஆரம்பமாகின. விளையாட்டு விழாவின் போது உள்ளூராட்சி சபையினால் எவ்வித சேவையும் மேற்கொள்ளப்படவில்லை என விளையாட்டு அதிகாரிகள் ஆளுநரிடம் தெரிவித்தனர். அதன் பின்னர், விளையாட்டு விழாவின் போது, கந்தளாய் உள்ளூராட்சி சபையின் அவசர ஆய்வுச் சுற்றுப்பயணத்தில் ஆளுநர் இணைந்துகொண்டார்.

அதே நேரத்தில், பிரதேச சபை தலைவர், உப தலைவர், செயலாளர், நிர்வாக அதிகாரி, தலைமை மேலாண்மை சேவைகள் அதிகாரி ஆகிய பதவிகளில் எந்த நபரும் இல்லாததை ஆளுநர் குற்றம் சாட்டினார். மாகாணத்தில் நடைபெற்ற ஒரு முக்கிய விழாவில் பிரதேச சபையின் எந்தவொரு தலைவரும் தன்னை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்றும் அவர் மிகுந்த கவலையுடன் கூறினார். பின்னர் உள்ளூராட்சி ஆணையாளர் குழு மீது நடவடிக்கை எடுப்பதாக ஆளுநருக்கு தகவல் தெரிவித்தனர். மக்களுக்கு சேவையாற்றுவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட அரச நிறுவனங்கள் சரியான சேவையை செய்யவில்லை என்றால், அதற்காக செலவிடப்பட்ட வரிப் பணத்தை மக்கள் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

# வறுமையில் வாழ்வது ஒரு பலம்



(வி.ரி.சகாதேவராஜா)

வாழ்வில் வறுமை என்பது ஒரு பின்னடைவல்ல. அது ஒரு தடையுமல்ல. உண்மையில் வறுமையில் வாழ்வது என்பது ஒரு பலம் .அது நமக்கு பல படிப்பினைகளை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு தேசிய மட்ட போட்டிக்கு தெரிவான றாணமடு இந்து மகாவித்தியாலய கபடி மற்றும் எல்லே வீராங்கனைகளை பாராட்டும் விழாவில் உரையாற்றிய சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். எம்.எம்.அமீர் தெரிவித்தார்.

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாணமட்ட பெருவிளையாட்டு போட்டிகளில் கபடி மற்றும் எல்லே போட்டிகளில் மாகாணத்தில் சாம்பியனாகி ,தேசிய ரீதியில் தெரிவான நாவிதன்வெளி கோட்டத்திற்கு உட்பட்ட றாணமடு இந்து மகா வித்தியாலய வீராங்கனைகளை பாராட்டுகின்ற நிகழ்வு நேற்று முன்தினம்ஃ அதிபர் எஸ்.கதிரை நாதன் தலைமையில் நடைபெற்றது. நாவிதன்வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரகுமாரின் ஏற்பாட்டில் நடைபெற்ற பாராட்டு விழாவில் பிரதி கல்வி பணிப்பாளர் ஹைதர்அலி உதவி கல்வி பணிப்பாளர்களான ஏ. முஸ்ரக்அலி வி.ரி.சகாதேவராஜா ஆசிரியர் ஆலோசகர்களான பி.குணரத்ன பி. பிரதீஸ்வரன் மற்றும் அயல்பாடசாலை அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

இந்த பாராட்டு விழாவில் பணிப்பாளர் அமீர் மேலும் உரையாற்றுகையில்.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் சமூகம் பெரும் அக்கறை காட்டி வருகின்றது மகிழ்ச்சிக்குரியது. பாடசாலையும் சமூகமும் ஒன்றிணைகின்ற பொழுது அப்பாடசாலை பெரும் வளர்ச்சியை காண்கின்றது. விளையாட்டு பல்கலைக்கழகம் செல்வதற்கும் கூடுதலான பங்களிப்பை வழங்குகின்றது. அந்த வகையிலே இப்பாடசாலை பழம் பெரும் பாடசாலை. இங்கு வழமையாகவே விளையாட்டுத்துறைக்கு போதிய பங்களிப்பு அளித்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது.

இவர்களை வீரர்கள் என்கின்றோம் உடலியல் ரீதியாக மாத்திரம் அல்ல உணர்வு ரீதியாகவும் உள ரீதியாகவும் இவர்கள் திகழ்கிறார்கள். வறுமைதான் வாழ்வில் முன்னேற்றப்படி என்று சொல்வார்கள் நானும் ஒரு வறுமையான குடும்பத்தில் பிறந்தவன் தான். தினமும் கடலுக்குச் சென்று வலை இழுத்தவன் தான். அந்த வகையிலே ஒரு நாள் நான் கடலுக்குச் சென்று வரும்பொழுது அங்கு கூலியாக தந்த பத்து ரூபாயை எனது அம்மாவிடம் கொடுத்தேன். அவர் மறுகணமே அதனை கசக்கி என் முகத்தில் எறிந்து உன்னை அனுப்பியது கல்வி கற்கவே தவிர இந்த பணத்தை பெறுவதற்கு அல்ல என்று சொன்னார் . அன்று எனது தாயார் இந்த பத்து ரூபாயை மனமுகர்ந்து ஏற்று இருந்தால் இன்று நான் உங்கள் முன்னிலையில் பேசமுடியாதிருந்திருக்கும். உண்மையிலேயே அப்படிப்பட்டவர்கள் இருந்த காரணத்தினால்தான் இன்று நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எனவே வறுமை ஒரு தடையல்ல. அந்த வகையிலே நீங்கள் பின்தங்கிய பிரதேசத்தில் வாழுகிறோம் என்று நீங்கள் கருதலாம். ஆனால் நீங்கள் தான் செல்வந்தர்கள். பின்தங்கிய என்று சொல்கின்ற இடங்களிலே அவர்கள் சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் வாழ்கின்றார்கள். அதுதான் செல்வந்த நிலை என்றும் சொல்வார்கள். எல்லாமே மனங்களில் தான் இருக்கின்றது. நகர்ப்புறத்திலே படாடோபமாக வாழ்வார்கள். அவர்களது பிள்ளைகள் போதைகளிலும் ஒழுங்கீனமாகவும் நடப்பார்கள். இறுதியில் வாழ்க்கை சூனியமாக மாறுகிறது.ஆனால் இப்படிப்பட்ட கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்கள் சந்தோஷமாக வாழ்கின்றார்கள். பிள்ளைகளும் ஆரோக்கியமாக வளர்கின்றது .எனவே நீங்கள் தரமான கல்வியை முன்னெடுக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

இந்த வைபவத்தில் கபடி எல்லே போட்டியிலே சாம்பியனாக தெரிவு செய்யப்பட்ட மாணவிகள் அனைவருக்கும் பூமாலை சூட்டி கைலாகு கொடுத்து பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள். அத்துடன் இம்முறை பாடசாலையில் இருந்து பல்கலைக்கழகம் செல்கின்ற மாணவர்களும் பாராட்டப்பட்டனர். பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். இறுதியில் வீராங்கனைகள் விளையாட்டு ஆசிரியர் சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். செல்லும் வழியில் உள்ள ஏனைய பாடசாலைகள் வீராங்கனைகளை பாராட்டி நீராகாரம் வழங்கி கௌரவித்தனர்.

# இந்து நாகரீக பாடத்திற்கான செயலமர்வு



(வி.ரி.சகாதேவராஜா)

கல்வி அமைச்சின் சமய விழுமியங்கள் பிரிவு ஏற்பாடு செய்த கபொத உயர்தர மாணவர்களுக்கான இந்து நாகரீகம் பாட செயலமர்வு நேற்று நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. சம்மாந்துறை வலயத்தில் இம்முறை கபொத உயர்தர பரீட்சையில் இந்து நாகரீக பாடத்தில் தோற்ற இருக்கின்ற 92 மாணவர்களுக்கான இந்த செயலமர்வு நேற்று அதிபர் சீ. பாலசிங்கன் தலைமையில் நடைபெற்றது . கல்வி அமைச்சிலிருந்து சமயங்கள் விழுமிய பிரிவின் பிரதிக்கல்வி பணிப்பாளர் எஸ் சுந்தரலிங்கம் வளவாளராக கலந்து கொண்டார். அங்குரார்ப்பண நிகழ்வில் சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் எஸ் எம் எம் அமீர், சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, ஆசிரிய ஆலோசகர்களான கே.இரத்னேஸ்வரன், எஸ். அர்ஜ/னன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

சம்மாந்துறை வலயத்திலுள்ள 8 தமிழ் பாடசாலைகளை சேர்ந்த 92 மாணவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு பயன் பெற்றார்கள்.

# காத்தான்குடி மத்திய கல்லூரியில் மண்டபம் திறந்து வைப்பு



நூருள் /ஹுதா உமர்

மட்டக்களப்பு மத்தி வலயத்தின் காத்தான்குடி கல்விக் கோட்டத்திற்குற்பட்ட காத்தான்குடி மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட பிரதான ஒன்றுகூடல் மண்டபம் இன்று (23) திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை முதல்வர் எம்.ஏ.சீ.எம். சத்தார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சர் கலாநிதி எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பங்கேற்று கட்டடத்தினைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப்பணிப்பாளர் கலாநிதி எஸ்.எம்.எம்.எஸ். உமர் மௌலானா, காத்தான்குடி பிரதேச கல்விப்பணிப்பாளர் எம்.எம். கலாவுதீன், காத்தான்குடி நகர சபைதவிசாளர் எஸ்.எச். எம்.அஸ்பர் உள்ளிட்ட கல்வியதிகாரிகள், முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் வங்கி ஆலோசனை முகாம்



**வி.சுகிர்தகுமார்**

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற வங்கி ஆலோசனை முகாம் இன்று ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. பிரதேசத்தில் உள்ள தொழில் முயற்சியாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு தொழில் முயற்சி அபிவிருத்தி கடன்களை பெற்றுக்கொடுத்து அதனூடாக அவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதை அடிப்படையாக கொண்டே குறித்த வங்கி ஆலோசனை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் ஆலோசனையின் பேரில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் த.புவிதர்ஷன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட வங்கி ஆலோசனை முகாமில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச்சங்க முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் வளவாளராக கலந்து கொண்டு சமுர்த்தி வங்கியினூடாக பெறக்கூடிய கடன் மற்றும் அவற்றிற்கான வட்டி வீதம் கடனை பெறுவதற்கான வழிமுறைகள் அதனூடாக தொழில் முயற்சியாளர்கள் அடைந்து கொள்ள கூடிய நன்மைகள் தொடர்பில் விளக்கமளித்தார். அத்தோடு சமுர்த்தி வங்கிகளில் சமுர்த்தி பயனுகரிகளால் சேமிக்கப்பட்டுள்ள சேமிப்பு தொகை அவற்றிற்கு வழங்கப்படும் வட்டி வீதம் கிராம மட்டத்தில் விரிவுபடுத்தப்பட்டுள்ள இலகு கடன் சேவை தொடர்பிலும் குறிப்பிட்டார்.

மேலும் மூன்று தசாப்தகால அனுபவத்துடன் முன்னோக்கி செல்லும் சமுர்த்தி வங்கியின் செயற்பாடுகள் கணிணி மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பல்வேறு திட்டங்களையும் உள்வாங்கி முன்மாதிரியான வங்கியாக செயற்பட்டு வருவதையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் ஆலையடிவேம்பு தெற்கு வங்கி முகாமையாளர் கே.கவிதா மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் நிசாந்தினி, நிம்சாத், கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பிருந்தாயினி சமுர்த்தி வங்கிச்சங்கத்தின் உதவி முகாமையாளர் சுகிர்தகுமார் உள்ளிட்ட தொழில் முயற்சியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# அகம் அமைப்பின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவட்ட இளைஞர்களுக்கான வதிவிடப் பயிற்சி



**(சுமன்)**

மாற்றத்திற்கான இளைஞர்கள் எனும் தொனிப்பொருளில் அகம் மனிதாபிமான வள நிலையம் அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டு வரும் "இளைஞர்களின் ஊடாக சமாதானத்தினை ஏற்படுத்தல்" எனும் திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தினைச் சேர்ந்த இளைஞர்களுக்கான தலைமைத்தும் மற்றும் முறன்பாடுகளை தீர்க்கும் தந்திரோபாயம் தொடர்பான வதிவிடப் பயிற்சியின் ஆரம்ப வைபவம் இன்று திருகோணமலை சர்வோதயம் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. அகம் மனிதாபிமான வள நிலைய நிறுவனத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா தலைமையில் இடம்பெற்ற இவ் ஆரம்ப நிகழ்வில் திருகோணமலை மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி பணிப்பாளர் சி.ரவிகுமார் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பிரதி இணைப்பாளர் அ.மதன், வளவாளர் எம்.மிருனாளன், திட்ட உத்தியோகத்தர் த.அரவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வினை திட்ட இணைப்பாளர் செல்வி.நாகேஸ்வரன் மிரேகா நெறியாழ்கை செய்திருந்தார். இப்பயிற்சி செயலமர்வானது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச செயலகப்பிரிவின் கீழுள்ள இளைஞர்கள் 45 பேரை ஒன்றிணைத்து நடாத்தப்பட்டு வருகின்றது. அகம் அமைப்பினால் இதே போன்றதொரு வதிவிடப் பயிற்சியானது கடந்த மாதம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 46 தமிழ் மொழி மூல இளைஞர்களுகளை உள்ளடக்கி இடம்பெற்றிருந்தது. இவ் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தங்களது ஆரம்ப உரையில் இன்றுஎமது சமூகத்திலுள்ளவர்கள் பலவகையான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இவ்வாறு தங்களது சமூகத்தில் பாதிக்கப்படுகின்ற மக்களுக்கு இளைஞர்கள் கைகொடுத்து உதவ வேண்டும். இன்று இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை என்பது ஓர் முக்கிய பிரச்சினையாகவும், சமூகத்தினை அழிவிற்கு கொண்டு செல்லும் விடயமாகவும் இருப்பது நாம் அனைவரும் அறிந்த விடயமாகும்.

எனவே இளைஞர்களே எமது சமூகத்தின் முக்கிய பாத்திரம் என்பதால் சமூக செயற்பாட்டாளர்களாகவும், முன்மாதிரியானவர்களாகவும் திகழ வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்கள். இவ்வதிவிடப்பயிற்சியானது இன்றும், நாளையும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களின் சொத்துக்களையும், உயிர்களையும் பாதுகாக்க அதிகாரிகள் முன்வரவேண்டும்



**பைஷல் இஸ்மாயில் -**

சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களை உள்ளடக்கிய போசணை கொள்கைத் திட்டத்தை எமது பிரதேசத்தில் அமுல்படுத்துகின்ற அதேவேளை அரிசி ஆலைகளையும் எமது பிரதேசத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் எம்.முபாறக் தெரிவித்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கிராமப்புற பொருளாதார மறுமலர்ச்சி மூலம் வறுமையை ஒழித்தல் எனும் தொனிப்பொருளின் கீழ் தேசிய உணவு பாதுகாப்புத்திட்ட பிரதேச மட்ட கலந்துரையாடல் (22) குச்சவெளி பிரதேச செயலாளர் கே.குணநாதன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட குச்சவெளி பிரதேச சபை தவிசாளர் எம்.முபாறக் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதியின் இத்திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்களின் பொருளாதார மறுமலர்ச்சியை உருவாக்குவதுடன் அவர்களின் வறுமையையும் ஒழிக்க முடியும். அத்துடன் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களுக்கு சத்துணவு வழங்குவதன் மூலம் அவர்களின் ஊட்டச்சத்து குறைபாட்டிலிருந்து விடுவித்து, உணவுப் பாதுகாப்பையும், வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்த முடியும். இதன் மூலம் பாதுகாப்பான அரோக்கிய கிராமத்தை உருவாக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

குச்சவெளி பிரதேசத்தில் கால்நடைகளின் தொல்லை வெகுவாக அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் விபத்துச் சம்பவங்களும் அதிகரித்து வருன்றன. கால்நடைகளை ஒரு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவராவிட்டால் இன்னும் பல ஆபத்துக்களை நாம் எதிர்கொள்ள வேண்டிவரும். எமது மக்களையும், அவர்களின் சொத்துக்களையும், உயிர்களையும் பாதுகாக்க அதுதொடர்பான அதிகாரிகள் உடனடி நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். அவர்களுக்கான சகல ஒத்துழைப்புக்களை குச்சவெளி பிரதேச சபையும், சபை உறுப்பினர்களும் வழங்க என்றும் தயாராக இருக்கின்றோம் என்றும் குறிப்பிட்டார். இந்நிகழ்வில், குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர்கள், கிராம சேவகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். சிறப்பித்தனர்.

# மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வரவேற்பும் திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு



**நூருள் /ஹுதா உமர்**

புதிதாக கடமைகளை பொறுப்பேற்ற கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் டீ. ஜி. மலின்டன் கொஸ்டா அவர்களை வரவேற்கும் நிகழ்வும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் முன்னெடுக்கப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலும் நேற்று (22) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதி பணிப்பாளர் டாக்டர் எம்.பி.அப்துல் வாஜித் ஆரம்ப உரையையும் பணிப்பாளர் தலைமை உரையையும் நிகழ்த்தியதுடன் பிரதம அதிதியாக கலந்துகொண்ட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சிறப்புரை நிகழ்த்தப்பட்டது

மேலும் இந்நிகழ்வில் மாகாண பணிப்பாளருக்கு கல்முனை பிராந்திய பணிமனையினால் பொன்னாடை போற்றி கௌரவிக்கப்பட்டமையும்

# உலகளாவிய ரீதியிலான பேச்சுப் போட்டியில் வென்ற மாணவிக்கு பாராட்டு

**நூருள் /ஹுதா உமர்**

உலகளாவிய ரீதியிலான பேச்சுப் போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்று வெற்றிச் சான்றிதழினை சுவீகரித்த கமு/ சது/ அரபா வித்தியாலய பழைய மாணவி ஜலீல் பாத்திமா மின்ஹா (மின்மினி மின்ஹா) வுக்கு சம்மாந்துறை வலயக் கல்விப் பணிமனையினால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. கமு/ சது/அரபா வித்தியாலய அதிபர் எம்.எச். நூருள் ஹிமாயா தலைமையில் இடம்பெற்ற பாராட்டு விழாவில் ஸ்கொட்லாந்து சங்க இலக்கிய ஆய்வு நடுவம் நடாத்திய 06– 10 வயதினருக்கிடையிலான மாணவர்கள் இந்தியா, மலேசியா ,கனடா, இலங்கை, அமெரிக்கா, ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து , கட்டார் , மலேசியா, சிங்கப்பூர், ஜெர்மனி, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, இன்னும் பல நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்கேற்ற "கல்வி கண் போன்றது" எனும் தலைப்பில் இடம்பெற்ற உலகலாவியப் பேச்சுப் போட்டியில் கலந்து கொண்டு சர்வதேச ரீதியில் வெற்றி பெற்று , பாராட்டுச் சான்றிதழினைப் பொற்றுக் கொண்ட இலங்கை தேசத்தின் சார்பில் கலந்து கொண்ட சம்மாந்துறை மாணவியான ஜலீல் பாத்திமா மின்ஹா பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இவ்விழாவுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.அமீர், கௌரவ அதிதிகளாக வலயக் கல்விப் பணிமனை பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். ஹைதர் அலி மற்றும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. எல்.அப்துல் மஜீத், விஷேட அதிதியாக , சம்மாந்துறை கோடடக் கல்வி அதிகாரி– எம்.ஏ. சபூர் தம்பி இன்னும் பல கல்வி அதிகாரிகளும், பாடசாலை கல்விச் சமூகமும் கலந்து கொண்டனர். மின்மினி மின்ஹாவுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, "சர்வதேச பறவை" எனும் விருதும் வழங்கி கௌரவித்திருந்தனர்.




# வட மாகாணத்தில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண உயர்மட்ட கலந்துரையாடல்



**(வாஸ் கூஞ்ஞ)**

வட மாகாணத்தில் கமத்தொழில், வன ஜீவராசிகள் மற்றும் வனவளத்துறை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் உயர்மட்ட கலந்துரையாடலொன்று கமத்தொழில் வன ஜீவராசிகள் மற்றும் வனவள அமைச்சர் கௌரவ மகிந்த அமரவீர அவர்களின் தலைமையில் அமைச்சு அலுவலகத்தில் வியாழக்கிழமை (22) இடம்பெற்றது. கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் ஆகியோரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற குறித்த இவ் நிகழ்வில்

வன்னி மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்ட மக்கள் எதிர்நோக்குகின்ற வாழ்வாதார காணிகள்இ வதிவிடக் காணிகள், விவசாய செய்கை, மேய்ச்சல் தரைகள், சத்துணவு திட்டம் போன்ற பல்வேறு பிரச்சினைகள் அடங்கிய கோரிக்கைகள் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் அவர்களினால் விவசாய அமைச்சர் கௌரவ மகிந்த அமரவீர அவர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் வனவளத்துறையின் ஆளுகைக்குள் இருக்கின்ற விவசாய மற்றும் மேய்ச்சல் தரைக்கு உகந்த இடங்களை விடுவிப்பது தொடர்பாகவும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு சாதகமான முடிவுகளும் எட்டப்பப்பட்டது. இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சர் கௌரவ டக்லஸ் தேவானந்தாஇ வட மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டங்களின் அரசாங்க அதிபர்கள்இபொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட பலரும் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.